ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியில் 20 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு கல்விக்கு குறைந்த நிதி!

இந்தியாவில் தற்போது அச்சம் நிறைந்த சூழல் நிலவுகிறது!

ஒன்றிய நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் - மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி காட்டமான பேச்சு!

புதுடெல்லி, ஜூலை 30- 20 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு கல்விக்கு குறைந்த நிதியே ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் இந்தியாவில் தற்போது அச்சம் நிறைந்த சூழல் நிலவுகிறது என்றும் ஒன்றிய நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

ஒன்றிய நிதிநிலை குறித்து மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி நேற்று பேசியதாவது:

"இந்தியாவில் அச்சம் நிறைந்த சூழல் நிலவுகிறது. அந்த அச்சம் நம் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் பரவியுள்ளது. பா.ஜ.க.வில் ஒரு நபர் மட்டுமே பிரதமர் கனவு காண அனுமதி கிடைக்கிறது. பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் பிரதமராக விரும்பினால் அவர் பல்வேறு பிரச்சினைகளை எதிர் கொள்ள நேரிடும். பா.ஜ.க. ஆட்சியில் ஒன்றிய அமைச்சர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள் என அனைவரும் அச்சத்தில் உள்ளனர். என்னுடைய ஒரே கேள்வி, இந்தியாவில் ஏன் இந்த அச்சம் ஆழமாக பரவியுள்ளது என்பதுதான். எனது பேச்சைக் கேட்டு பா.ஜ.க.வினர் சிரித்தாலும் அவர்கள் உள்ளுக்குள் ஒரு வித அச்சத்தில்தான் உள்ளனர்.

பிரதமர் மோடி தனது சட்டையில் அணிந்திருக்கும் தாமரை சின்னத்தால் குறிப்பிடப்படும் 'சக்கர வியூகத்தில்' இந்தியா சிக்கியுள்ளது. மகாபாரதத்தில் சக்கர வியூகத்தில் அபிமன்யூ மாட்டிக் கொண்டதைப் போல, இந்தியாவும் மோடி ஆட்சியில் சிக்கிக்கொண்டுள்ளது. இந்தியாவை கைப்பற்றிய பா.ஜ.க.வின் சக்கர வியூகத்துக்கு பின்னால் 3 படைகள் உள்ளன. அவை, இந்தியாவின் வளங்கள் அனைத்தையும் சொந்தம் கொண்டாடும் இருவர், சி.பி.ஐ., அமலாக்கத் துறை போன்ற ஒன்றிய அரசின் ஏஜென்சிகள், அரசியல் அதிகார ஆசை. இந்த மூன்றும் சேர்ந்து இந்தியாவை சீரழித்துவிட்டன. சமீபத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஒன்றிய பட்ஜெட் இந்த சக்கர வியூகத்தின் சக்தியை பலவீனப்படுத்தும் என்பது எனது கணிப்பு.

ஜி.எஸ்.டி. மூலம் தொழில்கள் அழிவு!

ஒன்றிய நிதிநிலை அறிக்கை இந்த நாட்டின் விவசாயிகளுக்கு, இளைஞர்களுக்கு, தொழிலாளர்கள், சிறு வணிகர்களுக்கு உதவும் என்று சொல்லப்பட்டது. ஆனால், எனது பார்வையில் இந்த பட்ஜெட்டின் ஒரே நோக்கம் ஏகபோகமாக வணிகம்செய்யநினைப்பவர்களின் கட்டமைப்பையும், ஜனநாயகத்தையும் அழிக்கும் அரசு ஏஜென்சிகளின் கட்டமைப்பையும் வலுப்படுத்துவது ஆகும். ஏனென்றால், சிறு வணிகங்களை கடுமையாக பாதித்துள்ள வரி பயங்கரவாதம் குறித்து பட்ஜெட்டில் எதுவும் இல்லை. ஜி.எஸ்.டி. என்பது வரிவிதிப்பு பயங்கரவாதம். ஜிஎஸ்டி மூலம் சிறு, குறு, நடுத்தர தொழில்கள் அழிகின்றன. ஜி.எஸ்.டி. மூலம் வரி பயங்கரவாதத்தை ஏவியுள்ளது ஒன்றிய அரசு.

அக்னி பாதை திட்டத்தில் பணியாற்றும் வீரர்களுக்கு ஓய்வூதியம் வழங்க பட்ஜெட்டில் எந்த நிதி ஒதுக்கீடும் இல்லை. இளைஞர்களைப் பாதிக்கும் மிகப் பெரிய பிரச்சினை வினாத்தாள் கசிவு. ஆனால் பட்ஜெட்டில் அது தொடர்பாக எதையும் நிதியமைச்சர் குறிப்பிடவில்லை. கடந்த 10 ஆண்டுகளில் 70 வினாத்தாள் கசிவு சம்பவங்கள் இந்தியாவில் நிகழ்ந்துள்ளன. மேலும், கடந்த 10 ஆண்டுகளில் நடந்த நீட் தேர்வு வினாத்தாள் கசிவு தொடர்பாக பட்ஜெட்டில் எந்த வார்த்தையும் இடம்பெறவில்லை. மோடி அரசு என்பது வேலைவாய்ப்பின்மை மற்றும் வினாத்தாள் கசிவின் அர்த்தமாக மாறிவிட்டது. ஒன்றிய பட்ஜெட்டில் கடந்த 20 ஆண்டுகள் இல்லாத அளவுக்கு கல்விக்கு குறைந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அதேபோல், பட்ஜெட்டில் விவசாயிகளுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலைக்கான சட்டபூர்வ உத்தரவாதம் எதுவும் இல்லை. என்.டி.ஏ. அரசு செய்யாததை நாங்கள் செய்வோம் என்று விவசாயிகளுக்கு நான் சொல்ல விரும்புகிறேன். இதே அவையில் குறைந்த பட்ச ஆதரவு விலைக்கான சட்டபூர்வ உத்தரவாத மசோதாவை நிறைவேற்றுவோம். இந்த பட்ஜெட்டுக்கு முன், நடுத்தர வர்க்கத்தினர் பிரதமர் மோடிக்கு ஆதரவாக இருந்தனர். இப்போது இந்த பட்ஜெட் மூலம் அதே நடுத்தர வர்க்கத்தை முதுகிலும் நெஞ்சிலும் பா.ஜ.க. அரசு குத்திவிட்டது.

இந்தியாவின் உள்கட்டமைப்பு மற்றும் வணிகங்களை இரண்டு பேர் மட்டுமே கட்டுப்படுத்துகிறார்கள். விமான நிலையங்கள், தொலைத் தொடர்பு நிறுவனங்கள், துறைமுகங்கள் என அனைத்தையும் அவர்களே வைத்துள்ளனர். அடுத்ததாக அவர்கள் ரயில்வேயிலும் கால்பதிக்க உள்ளனர். இந்தியாவின் செல்வத்தை எடுத்துக்கொள்ள அவர்களுக்கு ஏகபோக உரிமை வழங்கப்படுகிறது.

பட்ஜெட் கூட்டத் தொடருக்கு முன் நிதியமைச்சகத்தில் நடைபெற்ற பாரம்பரிய அல்வா கிண்டும் விழாவில் ஒரு பழங்குடியினர், தலித் அதிகாரியை கூட காண முடியவில்லை. மொத்தம் 20 அதிகாரிகள் ஒன்றிய பட்ஜெட்டை தயார் செய்தனர். அவர்களில் ஒருவர் கூட பிற்படுத்தப்பட்டவரோ, தலித்தோ, பழங்குடியினரோ இல்லை. இந்திய மக்கள் தொகையில் தலித்துகள், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர் 73 சதவீதம் பேர் உள்ளனர். ஆனால், ஒன்றிய பட்ஜெட் மூலமாக அவர்கள் எதையும் பெறவில்லை.

விவசாயிகளுக்கான ஆதரவு விலை!

பா.ஜ.க. வகுத்துள்ள சக்கர வியூகம் கோடிக்கணக்கான மக்களுக்கு தீங்கு விளைவிக்கும். இந்த சக்கர வியூகத்தை நாங்கள் உடைக்கப் போகிறோம். இதைச் செய்வதற்கான வழி, உங்களைப் பயமுறுத்தும் ஒன்று. அதுதான் சாதிவாரிக் கணக்கெடுப்பு. இந்த அவையில் குறைந்தபட்ச ஆதரவு விலைக்கான சட்டபூர்வ உத்தரவாத மசோதாவை இண்டியா கூட்டணி நிறைவேற்றும். அதேபோல், சாதிவாரிக் கணக்கெடுப்பை நிறைவேற்றுவோம். அது நீங்கள் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் நடக்கும்.

(ராகுல்காந்தி அதானி, அம்பானி என்ற பெயரை குறிப்பிட்டதற்கு பா.ஜ.க.வினர் எதிர்ப்பு தெரிவித்து கூச்சலிட்டனர்)

இந்தியாவின் இயல்பு வேறு. ஒவ்வொரு மதத்திலும் சக்கர வியூகத்துக்கு எதிரான அமைப்பு உள்ளது. இந்து மதத்திலும் உள்ளது. பசுமைப் புரட்சி, சுதந்திரம், அரசியலமைப்பு ஆகியவற்றின் மூலம் நீங்கள் உருவாக்கிய சக்கர வியூகத்தை நாங்கள் உடைப்போம். நீங்கள் உங்களை இந்து என்று அழைக்கிறீர்கள். ஆனால், உங்களுக்கு இந்து மதத்தை பற்றி புரியவில்லை".

இவ்வாறு மக்களவையில் ராகுல் காந்தி பேசினார்.

சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நேற்று (29.07.2024) நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமையில், அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகள் மற்றும் வடகிழக்குப் பருவமழை முன்னேற்பாட்டுப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இந்த ஆய்வுக் கூட்டத்தில், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவைகள்நிறுவனத்தின் (TNUIFSL) தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் முனைவர் எஸ்.விஜயகுமார், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், புதிய திருப்பூர் மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் ஹனீஸ் சாப்ரா, தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழக (TUFIDCO) மேலாண்மை இயக்குநர் கே.விவேகானந்தன், பேரூராட்சிகளின் இயக்குநர் கிர குராவா, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் வி.தட்சிணாமூர்த்தி. சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், நகராட்சி நிருவாக இயக்குநர் சு.சிவராசு மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாட்டிற்காக - புதிய

சாலைப் போக்குவரத்து - நெடுஞ்சாலைத் திட்டங்கள் ஏதேனும் வகுக்கப்பட்டுள்ளதா?

மக்களவையில் - கழக நாடாளுமன்றக்குழு துணைத் தலைவர் தயாநிதி மாறன் கேள்வி!

சென்னை, ஜூலை 30-

"தமிழ்நாட்டிற்காக புதிய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் திட்டங்கள் ஏதேனும் வகுக்கப்பட்டுள்ளதா?" என கழக நாடாளுமன்ற குழுத் துணைத்தலைவர் தயாநிதி மாறன் எம்.பி கேள்வி எழுப்பினார்.

தமிழ்நாட்டிற்காக புதிய சாலைகள் மற்றும் நெடுஞ்சாலைத் திட்டங்கள் ஏதேனும் வகுக்கப்பட்டு அல்லது முன்மொழியப்பட்டுள்ளனவா என்றும் - அவ்வாறு திட்டங்கள் வகுக்கப்பட்டிருந்தால் அத்திட்டம் செயல்படவுள்ள வழித்தடங்களை தனித்தனியாகக் குறிப்பிட்டு விளக்கமளிக்கவும் என்பது போன்ற பல்வேறு கேள்விகளை ஒன்றிய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சகத்திடம்

மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினரும் கழக நாடாளுமன்ற குழுத் துணைத் தலைவருமான தயாநிதி மாறன் கேள்வி எழுப்பினார்.

அதன் விவரங்கள் வருமாறு :

தமிழ்நாட்டிற்காக புதிய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் திட்டங்கள் வகுக்கப்பட்டு அல்லது முன்மொழியப்பட்டுள்ளதா எனவும் அவ்வாறெனில் அதன் விவரங்களை தெரியப்படுத்தவும் எனக் கேள்வி எழுப்பினார்

அவ்வாறு திட்டம் வகுக்கப்பட்டிருந்தால், அத்திட்டத்திற்கான நோக்கம் குறித்தும், எந்தெந்த சாலைகள் மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது என்பதை குறிப்பிட்டு விளக்கவும் எனக் கேள்வி எழுப்பினார்.

அவ்வாறு முன்மொழியப்பட்டுள்ள திட்டங்கள் மூலம் தமிழ்நாட்டின் உள்ளூர் மற்றும் சமூக பொருளாதாரம் எவ்வாறு வளர்ச்சி அடையும் என்றும், இத்திட்டங்களின் கட்டுமான பணிகளால் அப்பகுதியில் வசிக்கும் பொது மக்களுக்கும், தொழிற்சாலைகளுக்கும் எந்த வகையிலும் இடையூறு வராது என்பதை உறுதி செய்ய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் என்ன? எனக் கேள்வி எழுப்பினார்.

சாலைப் பாதுகாப்பை மேம்படுத்த புதிய நடவடிக்கைகள் ஏதேனும் மேற்கொள்ளப்பட்டுள்ளதா? என்றும், மேலும் இந்த புதிய சாலைகள் மற்றும் நெடுஞ்சாலைகள் கட்டுமானத்தின்போதும் அதற்குப் பின்னரும் பாதுகாப்புத் தரங்கள் பராமரிக்கப்படுவதை உறுதிசெய்ய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் என்ன? என்றும் கேள்வி எழுப்பினார்.

இந்த புதிய சாலை மற்றும் நெடுஞ்சாலைத் திட்டங்கள் குறித்து அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் மற்றும் வணிகர்கள் போன்றோரிடம் கலந்துரையாடி, அவர்களின் கருத்துக்கள் பெற ஒன்றிய அரசிடம் ஏதேன் திட்டம் உள்ளதா? எனக் கேள்வி எழுப்பினார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆட்சி

ஆன்மிக ஆட்சிக்கு உதாரணமாகத் திகழும் பொற்கால ஆட்சி!

அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டிற்கான இலட்சினை வெளியிட்டு - அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

சென்னை, ஜூலை 30 -

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (29.07.2024) ஆணையர் அலுவலகத்தில் பழனியில் நடைபெறவுள்ள அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டிற்கான இலட்சினையை (Logo) வெளியிட்டார்.

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 27.02.2024 அன்று நடைபெற்ற இந்து சமய அறநிலையத்துறை ஆலோசனைக் குழு கூட்ட முடிவுகளின்படி பழனியில் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு ஆகஸ்ட் 24 மற்றும் 25 ஆகிய தேதிகளில் நடைபெறுகிறது. இதற்காக என் தலைமையில் 20 உறுப்பினர்களை கொண்ட ஒருங்கிணைப்புக் குழுவும், ஆணையர் தலைமையில் 11 செயற்பாட்டுக் குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன. இம்மாநாடு தொடர்பாக ஆதீன பெருமக்கள், ஒருங்கிணைப்புக் குழு உறுப்பினர்கள் மற்றும் துறை அலுவலர்களுடன் 10 ஆலோசனைக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. மேலும், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களும், உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்களும், நானும் பழனிக்கு சென்று 2 ஆய்வு கூட்டங்கள் நடத்தியதோடு, கடந்த வாரம் திண்டுக்கல் மாவட்ட நிர்வாகம் மற்றும் அனைத்து துறை அலுவலர்களின் ஒருங்கிணைப்புக் கூட்டமும் நடத்தப்பட்டுள்ளது.

இம்மாநாட்டிற்கு வெளி நாடுகளிலிருந்து 36 ஆய்வுக் கட்டுரைகள் உள்பட 1,003 ஆய்வுக் கட்டுரைகள் வரப் பெற்றுள்ளன. தமிழ்க்கடவுள் முருகனின் பெருமைகளை உலகறியும் வகையில் பறைசாற்றிய 15 நபர்களுக்கு முருகனடியார்களின் பெயரில் விருதுகள் வழங்கி சிறப்பு செய்யப்பட உள்ளது. இம்மாநாட்டிற்காக திண்டுக்கல், பழனி ஆகிய இடங்களில் தங்கும் அறைகள், 3 இடங்களில் உணவருந்தும் கூடங்கள், 10 இடங்களில் உணவு வழங்கிட ஏற்பாடுகள் என சுமார் ஒரு லட்சம் நபர்களுக்கு உணவு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 6 நுழைவு வாயில்களுடன் 1,000 வாகனங்கள் நிறுத்தும் வசதியும், 100 இடங்களில் குடிநீர் மற்றும் கழிப்பிட வசதியும் ஏற்படுத்தப்படுகிறது.

இம்மாநாட்டில் மாண்பமை உயர்நீதிமன்ற நீதிபதிகள், முக்கிய பிரமுகர்கள், வெளிநாடு களிலிருந்து துணை அமைச்சர்கள், மேயர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்று சிறப்பிக்க உள்ளனர். அறுபடை வீடுகளின் அரங்குகள், புகைப்பட கண்காட்சி, வேல்கோட்டம், 3D நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய காட்சியரங்கம், ஆன்மிக இசை நிகழ்ச்சிகள் மற்றும் கருத்தரங்கம் போன்ற அம்சங்களுடன் ஆன்மிக வரலாற்றில் தமிழ்க் கடவுளாம் முருகனுக்கு சிறப்பு சேர்க்கின்ற மாநாடாக, இந்த ஆட்சிக்கு ஒரு மைல்கல்லாக அமையும்.

மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, மொரீசியஸ், அமெரிக்கா, லண்டன், ஜப்பான், பிரான்ஸ், ஆஸ்திரேலியா, கனடா போன்ற 12 நாடுகளிலிருந்து மாநாட்டில் கலந்துக் கொள்ள விருப்பம் தெரிவித்துள்ளனர். அவர்களுக்கு தங்குமிடம், உணவு மற்றும் போக்குவரத்து வசதி கட்டணமில்லாமல் செய்து தருவதுடன், அவர்கள் விரும்பும் திருக்கோயில்களுக்கு சென்று சுவாமி தரிசனம் செய்திட ஏதுவாக செயல் அலுவலர்கள் தொடர்பு அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

தமிழை முன்னெடுக்கும் ஆட்சி!

இந்த அரசு பொறுப்பேற்றபின், முதலமைச்சர் அவர்கள் தலைமையில் ஆன்மிக பெருமக்கள், ஓய்வு பெற்ற நீதிபதிகள், சான்றோர்கள் மற்றும் அலுவலர்களை கொண்ட இந்து சமய அறநிலையத்துறை ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டு, இரண்டு முறை கூட்டம் நடத்தப்பட்டுள்ளது. அக்கூட்டத்தில்தான் இம்மாநாடு நடத்துவது குறித்து முடிவெடுக்கப் பட்டது. தமிழுக்கும், தமிழ்க் கடவுளான முருகனுக்கும் பெருமை சேர்க்கும் வகையில் ஆன்மிகத்தில் இந்த அரசிற்கு எந்த தடையும் இல்லை, தமிழை முன்னெடுக்கும் ஆட்சி என்ற இரண்டு பொருட்களை இம்மாநாடு நிறைவு செய்கிறது. முதலமைச்சர் அவர்களின் மேற்பார்வையில், அவரது உத்தரவின்படி அனைத்து பணிகளும் நடைபெற்று வருகின்றன.

இம்மாநாட்டிற்கு அரசின் சார்பில் நிதியுதவி வழங்கப்படுவதோடு, உபயதாரர்கள் பங்களிப்பு மற்றும் பழனி திருக்கோயில் நிதி ஆகியவற்றை வெளிப்படைத் தன்மையோடு அறிவிப்போம். இம்மாநாட்டையொட்டி பழனிக்கு உள்ளூர் விடுமுறை அளிப்பதற்கு முதலமைச்சர் அவர்கள் ஒப்புதல் தந்துள்ளார். பழனியையொட்டியுள்ள பிற மாவட்டங்களிலிருந்து கோரிக்கை வரப்பெற்றால் தேவையின் அடிப்படையில் அதுகுறித்து பரிசீலிக்கப்படும்.

இந்த அரசு பொறுப்பேற்றபின், 1,921 திருக்கோயில்களில் இதுவரை குடமுழுக்கு நடத்தப் பட்டுள்ளதோடு, இந்தாண்டு இறுதிக்குள் 2,000 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்படும். மாநில வல்லுநர் குழுவால் 9,327 திருக்கோயில்களுக்கு திருப்பணிகள் மேற்கொள்ள அனுமதி, ரூ.5,320.55 கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள், 17,000 திருக்கோயில் களில் ஒருகால பூசைத் திட்டம், ரூ.15 கோடி மதிப்பீட்டில் ஆணையர் அலுவலக கூடுதல் கட்டடம், அர்ச்சகர்கள் மற்றும் பணியாளர் களுக்கு பல்வேறு நலத்திட்டங்கள் என பல்வேறு முனைப்பான பணிகள் நடைபெற்று வருகின்றன. முதலமைச்சர் அவர்கள் இதுவரை இந்து சமய அறநிலையத்துறையின் 74 நிகழ்ச்சிகளில் கலந்துக் கொண்டுள்ளார். துறையின் அமைச்சர் என்ற முறையில் நான் 352 நிகழ்ச்சிகளில் பங்கேற்றதோடு பல்வேறு கள ஆய்வுகளையும் மேற்கொண்டுள்ளேன். ஆகவே, இந்த ஆட்சியை எப்படி ஆன்மிகத்திற்கு எதிரான ஆட்சி என்று கூற முடியும். ஆன்மிக ஆட்சிக்கு உதாரணமாக திகழும் பொற்கால ஆட்சியாக முதலமைச்சர் அவர்களின் ஆட்சி திகழ்கிறது என்று அனைவரும் கூறுகின்ற நிலை நிச்சயம் ஏற்படும்.

இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

பெருநகர சென்னை மாநகராட்சி
வருவாய்துறை

வ.து.ந.க.எண்.ஜி7/004782/ RDHQ /2024

ஒப்பந்தப்புள்ளிகள்

கீழ்கண்ட பணிகளுக்கு இரண்டு உறைமுறையில் மாநகர வருவாய் அலுவலர், வருவாய்துறை பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களால் கோரப்படுகிறது.

1	Selection of vendors to Hiring of 5 Nos. of Inspection vehicles for the use Addl.Revenue Officer and Asst. Revenue Officers of Revenue Department Head Quarters for a period of one year.	பணியின் மதிப்புத் தொகை 28,35,000/-	ஒப்ப முன் வைப்புத் தொகை 28,350/-

ஒப்ப படிவங்கள் http://tntenders.gov.in என்ற இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்யலாம். நிறைவு செய்யப்பட்ட ஒப்பபுள்ளிகள் சமர்ப்பிக்க இறுதி நாள் மற்றும் நேரம் 19.08.2024 அன்று பிற்பகல் 3.00 மணி

ஒப்பம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் 20.08.2024 அன்று பிற்பகல் 3.30 மணி

செ.ம.தொ.இ / 2667 / ஒப்பந்தப்புள்ளி / 2024

மாநகர வருவாய் அலுவலர்

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொலி காட்சி வாயிலாக திருவள்ளூர் மாவட்டம் காக்களூர் பால்பண்ணை வளாகத்தில் ரூ.3.50 கோடி மதிப்பில் 5000 லிட்டர் திறன் கொண்ட நவீன தயிர் உற்பத்தி நிலையத்தை திறந்து வைத்ததைத் தொடர்ந்து பூவிருந்தவல்லி சட்ட மன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்து பார்வையிட்டார் அருகில் பொது மேலாளர் ராஜேஷ், ஒன்றியச் செயலாளர் ஆர்.ஜெயசீலன், பொதுகுழு உறுப்பினர் த.எத்திராஜ், ஆவின் துணை பதிவாளர் சித்ரா, உதவி பொது மேலாளர்கள் பானுமதி, நாகராஜ், வெங்கடெஸ்வரலு, சந்திப், டெய்ரி மார்க்கெட்டிங் அலுவலர் ஜெய்விக்னேஷ், இன்ஜினியர் அகிலேஷ், நிர்வாகிகள் கே.கே.சொக்கலிங்கம், டி.எம்.ராமச்சந்திரன், , டி.தரணி, சாமுண்டீஸ்வரி சண்முகம், டி.கே.பூவண்ணன், எஸ்.சௌந்தரராஜன், வி.தியாகராஜன், தொமுச சுரேந்திரன், கே.சரவணன், ஜெய்சங்கர், ஸ்ரீதர், திராவிட தேவன், தியாகராஜன், அருண்கீதன், டி.சதீஷ், கோவிந்தராஜன், ஜாகிர், இயேசுபாலன், உள்பட பலர் உள்ளனர்.

தமிழ்நாடு மருத்துவக் கவுன்சிலில்!

சிறந்த மருத்துவர்களுக்கான விருது வழங்கும் விழா!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் விருதுகள் வழங்கி சிறப்புரை!

சென்னை, ஜூலை 30 -

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (29.07.2024) சென்னையில் நடைபெற்ற தமிழ்நாடு மருத்துவ கவுன்சில் மருத்துவர்களுக்கு விருது வழங்கும் விழாவில் பங்கேற்று, விருதுகள் வழங்கி விழா பேருரையாற்றினார். அவை:

தமிழ்நாடு மருத்துவக் கவுன்சில் என்பது தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி மாநிலத்தில் நவீன மருத்துவம் செய்யும் மருத்துவப் பயிற்சியாளர்களின் ஒழுங்குமுறை அதிகாரம் மற்றும் மருத்துவப் பயிற்சிக்கான மருத்துவர்களின் பதிவு மற்றும் உரிமம் ஆகியவற்றுடன் தொடர்புடைய ஒரு சட்டப்பூர்வ அமைப்பாகும். இது தேசிய மருத்துவ ஆணையம் மற்றும் இந்திய மருத்துவ கவுன்சிலின் மாநில பிரிவாகும். 12.05.1914 அன்று, மெட்ராஸ் மெடிக்கல் கவுன்சில் முதல் உலகப் போருக்கு முன்பு அப்போதைய கவர்னர் ஜெனரலால் தொடங்கப்பட்டது. அதன்படி ஒரு பழமையான மருத்துவ கவுன்சில் அமைப்பாக தற்போது இது செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. மேலும் சர்ஜன் ஜெனரல் டாக்டர் டபிள்யூ.பி.பேனர்மேன், மெட்ராஸ் மெடிக்கல் கவுன்சிலில் பதிவு செய்த முதல் நபர் மற்றும் கவுன்சிலின் முதல் தலைவர் ஆவார்.

மருத்துவர் பணி அறிய முழு கவச உடை அணிந்து கோவிட் வார்டுக்குள் சென்ற முதலமைச்சர்

தமிழ்நாடு மருத்துவ கவுன்சில் அமைப்பில் பல்வேறு விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றது. 2012 ஆம் ஆண்டு பி.சி.ராய் விருதுகள் வரிசையில் உருவாக்கப்பட்ட ஒன்று. இந்த விருதுகள் வழங்குவது ஜூலை 2013 தொடங்கி அதன் தொடர்ச்சியாக இன்று விருதுகள் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் மருத்துவர்களுக்கு விருதுகள் வழங்குவதில் ஒரு சில சங்கடங்களும் இருக்கின்றது. இந்த மருத்துவக்கவுன்சிலில் பதிவு பெற்று பயிற்சி பெற்றுள்ள மருத்துவர்களின் எண்ணிக்கை 1,92,000 ஆக இருக்கின்றது. இதில் பரிசுகள் விருதுகள் என்று தரப்பட வேண்டும் என்றால் 1,92,000 பேருக்கும் தரப்பட வேண்டும். ஏனென்றால் கோவிட் காலங்களில் மருத்துவர்களின் சேவை என்ன என்பது சொல்லித் தெரிய வேண்டியத்தில்லை. உலகம் முழுவதும் ஒரு பேரிடர் நம்மை ஆட்டிப் படைத்த நேரத்தில் மருத்துவப் பெருமக்கள் தான் உயிருக்கு எந்தவிதமான உத்தரவு இல்லாமலும் கூட பொதுமக்களை காத்த பெருமை மருத்துவ சமூகத்தைச் சேரும். அந்த வகையில்தான் தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் மருத்துவச் செயல்பாட்டின் அங்கீகாரத்தைச் செயல்படுத்தும் நோக்கிலும், உற்சாகப்படுத்திடும் நோக்கிலும் இந்தியாவில் வேறு எந்த மாநில முதலமைச்சர் அவர்களும் செய்யாத செயலினை அன்று செய்தார்கள்.

கோவை இ.எஸ்.ஐ மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் கோவிட்டினால் பாதிக்கப்பட்டு உயிருக்கு போராடி வந்த கோவிட் நோயாளி ஒருவரை நேரிடையாக சந்தித்து அவருக்கு வழங்கப்படும் சிகிச்சைகள் குறித்து கேட்டறிந்து, ஆறுதல் கூறி வெளியில் பத்திரிக்கையாளர்களிடம் சொன்னார், நான் இந்த செயலினை செய்தது மருத்துவர்கள் 24 மணிநேரமும் நோயாளிகளின் உயிரினை காப்பாற்றுவதற்காக செய்துக் கொண்டிருக்கிறார்கள், அவர்களை ஊக்குவிக்கும்வகையில் அவர்களின் பணிகளின் தன்மையை பாராட்டிடும் நோக்கிலும் சந்தித்து இருந்தார்.

இந்த அரசு அமைந்தபிறகு மருத்துவர்களுக்கு பணிமாறுதலாக இருந்தாலும், பணிநிய மனமாக இருந்தாலும் அவரவர் விரும்பும் இடங்களுக்கு சென்றிடும்வகையில் கடந்த 3 ஆண்டுகளில் 11,734 மருத்துவர்களுக்கு கலந்தாய்வு மூலம் பணிமாறுதல் பெற்றிருக்கிறார்கள். செவிலியர்கள் 9,536பேரும், மருத்துவம் சார்ந்த களப்பணியாளர்கள் 9,628 பேர் என ஒட்டுமொத்தமாக 30,897 பேருக்கு பணியிட மாறுதல் கலந்தாய்வின் மூலம் பயன்பெற்று உள்ளனர்.

தமிழ்நாடு மருத்துவ கவுன்சிலில் பதிவு முறை எளிதாக்கப்பட்டுள்ளது!

மருத்துவ பணியிடங்களை நிரப்பபடும்வரை இந்திய அளவில் எந்த மாநிலத்திலும் கூட புதிய பணிநியமனங்களுக்கு கலந்தாய்வு நடத்திய தில்லை. ஆனால் இந்த 1,021 புதிய மருத்துவ பணியிடங்களுக்கு கலந்தாய்வு நடத்தி பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் தற்போது 2,553 மருத்துவர்களை நியமனம் செய்ய மருத்துவப்பணியாளர் தேர்வாணையம் மூலம் அறிவிப்பு வெளியிடப்பட்டு அதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது. கடந்த மாதத்தில் ஏறத்தாழ 15க்கும் மேற்பட்ட மருத்துவக்கல்லூரி பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு, நான் அவர்களிடம் சொன்னது, தமிழ்நாடு அரசு மருத்துவமனைகளில் காலியாக உள்ள 2553 மருத்துவப் பணியிடங்களை நிரப்ப அறிவிப்பு வெளியிட்டிருக்கிறது. ஜூலை 15ஆம் தேதி வரை நீங்கள் விண்ணப்பிக்க வாய்ப்பு இருக்கிறது. இதனை விண்ணப்பிக்க ஏதுவாக மருத்துவக்கவுன்சிலில் தங்களுடைய பெயர்களை பதிவு செய்து கொள்ள வேண்டும் என்று தெரிவித்திருந்தேன்.

அப்போது ஒரு சில மருத்துவர்கள் என்னிடம் சொன்னது, இதற்கான இடைவெளி மிக குறுகிய அளவில் இருக்கின்றது, எங்களால் இந்த அமைப்பில் விரைந்து பதிவு செய்து கொள்ள முடியுமா என்று தெரியவில்லை, காரணம் மருத்துவக்கவுன்சில் என்பது பதிவு என்று போனால் ஏராளமான விதிமுறைகள் இருக்கும். நான் உடன